# மருத்துவக்கலை வளர்ச்சிக்கு இஸ்லாமியர்களின் பங்களிப்பு

# Contribution of Muslims to the Development of Medicine

***முனைவர் கா. மைதீன்***
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
இந்தியா

**Dr. K. Maideen**
*Assistant Professor & Head*
*Department of Islam & Islamic Tamil Studies*
*Madurai Kamaraj University*
*Madurai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*மருத்துவம்*(Medicine) *என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும் அறிவியலும் ஆகும். இதனை நோய்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றை குணப்படுத்தவும் அவை வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல் அல்லது செயல்பாடு எனலாம். இவ்வகைச் செயல்பாடுகள் மூலம் மனிதர்களின் உடல் நலத்தைப் பேணுதல் மீள்வித்தல் ஆகியவற்றுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு உடல்நலம் பேணற் செயல்முறைகளை உள்ளடக்கும். தற்கால மருத்துவம் காயங்களையும் நோய்களையும் கண்டறிந்து குணப்படுத்துவதற்கு உடல்நல அறிவியல் உயிர் மருத்துவம் உயிர்மருத்துவ ஆய்வுகள் மருத்துவத் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்துகிறது. இவ்வாறான குணப்படுத்தல் பெரும்பாலும் மருந்துகள் அறுவை மருத்துவம் மற்றும் பிற சிகிச்சைகள் மூலம் செய்யப்படுகிறது. தற்கால மருத்துவத்துக்கு மருத்துவத் தொழில்நுட்பமும் நிபுணத்துவமும் இன்றியமையாதவை எனினும் நோயாளிகளின் உண்மையான துன்பத்தைக் குறைப்பதற்கு மனித உணர்வுகளைப் புரிந்து கொள்ளலும் கருணையும் தொடர்ந்தும் தேவைகளாகவே உள்ளன. மருத்துவக் கலையில் அப்படியான தேவைகளை உணர்ந்து அத்துறை வளர்ச்சியடைய இஸ்லாம் அல்லது இஸ்லாமியர்கள் ஆற்றிய பங்களிப்பை இக்கட்டுரை விவரித்துச் சொல்கிறது.*

## Abstract

*Medicine is the art and science of curing diseases. It is the science or activity that helps to detect, cure and prevent diseases. These activities include various health maintenance processes designed to maintain and restore human health. Modern medicine uses health sciences, biomedicine, biomedical research, and medical technology to diagnose and treat injuries and diseases. Such healing is often done through drugs, surgery, and other treatments. Medical technology and expertise are essential to modern medicine, but understanding of human emotions and compassion continue to be needed to reduce the real suffering of patients. Realizing such needs in the art of medicine, this article describes the contribution of Islam or Muslims to the development of medical field.*

**Citation**

Maideen, K. “Contribution of Muslims to the Development of Medicine.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 18–23.

**பண்டைய மருத்துவ முறை**

*வரலாற்றுக்கு முந்தைய கால மருத்துவத்தில் தாவரங்கள் விலங்குகளின் உடல் உறுப்புக்கள் மற்றும் கனிமங்கள் அடங்கியிருந்தன. பல வேளைகளில் இவை சடங்குகளோடு "மந்திர சக்திசுசு வாய்ந்த பொருள்களாகவே பயன்படுத்தப்பட்டன. பெயர்பெற்ற ஆன்மீக முறைகளில் ஆன்மவாதம்* (animism) *ஆன்மீகவாதம்* (spiritualism) *ஆவித்தொடர்பு* (shaamanism) *குறிசொல்லல்* (*divination*) *என்பவையும் இதில் அடங்கும். மருத்துவ மானிடவியல் பல்வேறு வரலாற்றுக்கு முந்தைய மருத்துவ முறைகள் குறித்தும் அவற்றுக்குச் சமூகத்துடன் இருந்த தொடர்புகள் குறித்தும் மருத்துவத்துறை ஆய்வு செய்கிறது. சங்ககால மருத்துவமுறைகளும் இங்குக் குறிப்பிடத்தக்கவை.*

*மருத்துவம் குறித்த பழைய பதிவுகள் இந்தியத் துணைக்கண்டத்தின் சித்தமருத்துவம் ஆயுர்வேத மருத்துவம் பண்டைய எகிப்திய மருத்துவம் மரபுவழிச் சீனமருத்துவம் பண்டைய கிரேக்க மருத்துவம் பண்டைய அமெரிக்க குடிகள் (மாயன்கள் செவ்விந்தியர்கள்) வழங்கிய மருத்துவமுறைகள் என்பவை இத்தொடர்பில் அடங்கும். பழங்கால கிரேக்க மருத்துவர்களான 'இப்போக்கிரட்டீசு காலென்' ஆகியோர்பிற்கால மருத்துவம் பகுத்தறிவு சார்ந்த முறையில் வளர்வதற்கு அடித்தளமிட்டனர்.*

*ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இஸ்லாமிய மருத்துவர்கள் இத்துறையில் முக்கியமான கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தினர். 'போக்கிரட்டீசினதும் காலெனினதும்' நுல்களின் அரபி மொழிபெயர்ப்புக்கள் அவர்களுக்கு பேருதவியாக அமைந்தன. தற்கால 'மருத்துவத்தின் தந்தை' எனப்படும் 'பொலிமத் அவிசென்னா' 'அறுவை மருத்துவத்தின் தந்தை' எனப்படும் 'அபுல்காசிஸ்' சோதனை அறுவை மருத்துவத்தின் தந்தை எனப்படும் 'அவென் சோவார்', 'சுற்றோட்ட உடற்றொழிலியலின் தந்தை' என வழங்கப்படும் 'இபின் அல் நாபிஸ் அவெரேர்', என்போர் இஸ்லாமிய மருத்துவத்தின் முன்னோடிகள் ஆவர். குழந்தை மருத்துவத்தின் தந்தை எனப்படும் ரேச் என்பார், மேல் நாட்டு மத்தியகால மருத்துவத்தில் செல்வாக்குடன் விளங்கிய உடல்நீர்மவியம்* (humorism) *என்னும் கிரேக்க மருத்துவக் கோட்பாட்டை முதன்முதலில் பிழை எனச் சுட்டிக்காட்டினார். மருத்துவக்கலையைப் பற்றி உலகப்பொதுமறையை வகுத்த வள்ளுவர்*

***நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல் (திருக்குறள்:948)***
***உற்றான் அளவும் பிணியளவும் காலமும்***
***கற்றான் கருதிச் செயல் (திருக்குறள்:949)***

*என குறிப்பிட்டுள்ளார். எனவே மனிதஇன வரலாற்றின் தொடக்ககால அனுபவத்திலிருந்து பலராலும் பல்வேறு காலகட்டங்களில் அந்தந்த காலச் ழ்நிலைகளுக்கேற்ப அவ்வப்போது ஏற்பட்ட நோய்களுக்கு மருந்துகளைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதன் மூலம் மெல்லமெல்ல மருத்துவக்கலை உயிர்பெற்றுள்ளது. இவ்வாறு பல்லோராலும் வளர்த்து வந்த மருத்துவக்கலைக்கு இஸ்லாம் அளித்த பங்களிப்பு மகத்தானது.*

**குர்ஆன் ஓர்நோய் நிவாரணி**

*'குர்ஆன்' தன்னை ஓர்நோய் நிவாரணி எனப் பிரகடனம் செய்திருப்பதும் நபிகள் நாயகம் அவர்கள் மருத்துவம் செய்வதற்கு துண்டுதல் வழங்கியிருப்பதும் இஸ்லாமியர்கள் இத்துறையில் அதிக கவனம் செலுத்தக் காரணமாக அமைந்தது எனலாம். இஸ்லாமியர்கள் கிரேக்க ரோம இந்திய மருத்துப் பாரம்பரியங்களை அழிவுறாது பாதுகாத்ததுடன் அவற்றை*

*ஆராய்ந்து புதிய மருத்துவ முறைகளையும் கண்டுபிடித்தனர். அத்துடன் பண்டைய மருத்துவ முறைகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்தியும் உள்ளனர். பரிசோதனை முறையிலான புதிய மருத்துவ முறைகளையும் அறிமுகப்படுத்தினர். பல புதிய மருத்துவக் கோட்பாடுகளை நிறுவியும் மருத்துவக்கலை வளர்ச்சிக்கு தங்களது பங்களிப்பைச் செய்தனர்.*

*இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் அரபு சமூகத்தவர்கள் பல்வேறு மருத்துவ முறைகளை அறிந்து வைத்திருந்தனர். விதவிதமான மூலிகைகளைப் பயன்படுத்தி தமக்கு ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சையளித்தும் வந்தனர். அக்காலப் புகழ்மிக்க வைத்தியர்களுள் ஒருவராக 'ஹாரிஸ் இப்னு கல்தா' காணப்பட்டார். இவர் பாரசீக வைத்திய முறைகளையும் தெரிந்து வைத்திருந்தார். எனினும் அக்கால மருத்துவ முறைகளில் பெரும்பாலானவை மூட நம்பிக்கைகளாக னியம் மாந்திரீகம் போன்றவற்றுடன் தொடர்புபட்டிருந்தன. அவற்றின் வளர்ச்சிக்காக அறிவியலுடன் தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.*

*இஸ்லாத்தின் வருகைக்குப் பின் அந்த சமூக்தில் காணப்பட்ட அர்த்தமற்ற முறைகள் நபிகளால் தடை செய்யப்பட்டன. அத்துடன் இரத்தம் குத்தி எடுத்தல் போன்ற சில பயனுள்ள மருத்துவமுறைகளை நபி அவர்கள் ஏற்கனவே இருந்ததை அனுமதித்தார்கள். புதிய பல மருத்துவ வகைகளையும் சிகிச்சை முறைகளையும் விளக்கிக் காண்பித்தார்கள். அவர்களது நோய் நிவராணம் பற்றிய இத்தகைய 'தீ' களை பல அறிஞர்கள் ''அத்திப்பன் நபவீ'' எனும் தலைப்பில் தொகுத்துள்ளனர். இவர்களது மகத்தான இம்முயற்சி பற்றிப் பேராசிரியர் ''மார்கிகேரியோத்'' தனது* Lectures on Arab Historians *என்னும் நுலில்* 'Grater industry and effort: tan in any analogous case' *என்று அதனோடு வேறு எதனையும் ஒப்பிட முடியாத அளவு கடும் ஒத்துழைப்பு புரிந்தன. இது மகத்தான முயற்சி எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு ''தீ'' அங்கீகரிக்கப்படும் முன்னர் அதன் ஆதாரபுர்வமான தன்மையை உறுதிப்படுத்த தேவையான அத்தனை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. (இஸ்லாமியக் கலைகள் முஹம்மது சரீப் றம்ஸீன் பக்கம்.111)*

*நபிகள் தம் போதனைகள் மூலம் மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள். ஒருமுறை ''அல்லாஹ் அடியார்களே நீங்கள் மருந்துகளைக் கொண்டு பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் மரணத்தைத் தவிர மற்றெல்லா நோய்களுக்கும் அல்லாஹ்'' மருந்துகளைப் படைத்துள்ளான். ஆனால் மனிதர்கள் அதனை அறியாதுள்ளனர் எனக் றினார். மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நோய்க்கும் மருந்துண்டு அம்மருந்தினை பயன்படுத்தினால் அல்லாஹ்வின் அருளால் நோய்குணமடையும் என்றார்கள். நபிகளாரின் இத்தகைய போதனைகள் நோய்களுக்கு சிகிச்சை செய்யும்படியும் பொருத்தமான மருந்து வகைகளைக் கண்டுபிடிக்கும் படியும் இஸ்லாமியர்களைத் துண்டின. இதனால் இஸ்லாமியர்கள் நபிகள் காலத்திலும் அவரை அடுத்து வந்த காலங்களிலும் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காக உழைத்து வந்தனர். குலபாஉர்ரசிதீன்களின் காலத்தில் இஸ்லாமிய சாம்ரா ீயம் விரிவடைந்ததால் அரபியரல்லாத நாகரிகமற்ற மக்களுடன் இஸ்லாமியர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. இதனால் பல புதிய நோய்கள் பற்றியும் அவற்றுக்கான மருத்துவச் சிகிச்சைமுறைகள் பற்றியும் அவர்களுக்குத் தெரியவந்தன. உமையாக்காலத்தில் இஸ்லாமிய அரசு மேலும் விரிவுற்றதனால் இத்துறையில் முன்னரிலும் பார்க்கக்டிய அறிவும் அனுபவமும் இஸ்லாமியர்களுக்கு கிடைத்தன. குறிப்பாக இக்காலப்பிரிவில் பிறமொழி மருத்துவ நுல்களை மொழிபெயர்க்கும் பணி தனிப்பட்ட முறையில் இடம்பெறத் தொடங்கியதால் பண்டைய கிரேக்க பாரசீக இந்திய மருத்துவ சிகிச்சை முறைகளை இஸ்லாமியர்களால் அறிந்துகொள்ள முடிந்தது.*

*இஸ்லாமியர்கள் மருத்துவ ஆராய்ச்சியில் டுபட்டு துரித வேகத்தில் முன்னேறிச் செல்லும் வேளையில் மேற்குலகம் இத்துறையில் மிகவும் பின்தங்கிக் காணப்பட்டது. உதாரணமாக தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தனியான மருத்துவமனைகளில் வைத்து அரசு செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த வேளையில் "வலீத் பின் அப்துல் மலிக்" காலத்தில் பிரான்சிய மன்னர் அந்நோயாளர்கள் அவர்கள் செய்த பாவம் காரணமாகவே இவ்வுலகில் கடவுளின் சாபத்திற்குள்ளாகி நோயுற்றிருப்பதாகக் றி அவர்களைத் தீயிட்டு எரிக்கும்படி கட்டளையிட்டான். மனநோயாளர்களைப் பொறுத்தவரை ஐரோப்பியர் அவர்களைப் பாவிகள் எனக் கருதி அவர்களின் கால்களைச் சங்கலியால் பிணைத்து உணவு உடை கொடுக்காது வதைத்தான். அவ்வேளையில் இஸ்லாமிய உலகில் மனநோயாளர்கள் அனுதாபத்துடன் நோக்கப்பட்டு நுரி மருத்துவ முறையின்படி சிகிச்சையளிக்கப்பட்டனர். இவர்களுக்கென தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு அறையிலும் இரு பணியாளர்கள் இருந்து அவர்களைப் பராமரித்தனர். தினமும் அவர்களுக்கு துய உணவும் உடையும் வழங்கப்பட்டன. இறைவழிபாட்டில் டுபடவும் குர்ஆனைச் செவியுரவும் வசதிகள் செய்து சிகிச்சையளிக்கும் முறையும் நபியவர்களால் அறிமுகம் செய்யப்பட்டன. குறிப்பாக போராட்டங்களில் காயமுற்றவர்களை மஸ்ஜிதுன் நபவியின் ஒரு பக்கத்தில் டாரம் அமைக்கப்பட்டு அதில் வைத்து சிகிச்சையளிக்கும் ஏற்பாடு செய்தார்கள். யுத்தத்தின் போது காயமுற்றிருந்த அத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறே சிகிச்சையளிக்கப்பட்டது.*

**மருத்துவ மொழிபெயர்ப்புப் பணிகள்**

*உமையாக் காலத்திலும் தனிப்பட்டோரால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பு பணி அப்பாசியக் காலத்தில் அரச ஆதரவுடன் நடைபெற்றதனால் கிரேக்க மருத்துவ மேதைகளான கெலன் ஹிபோகிரடிஸ் போன்றோரின் நுல்கள் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டன. கி.பி.750 - 900 வரையிலான காலங்களில் இம்மொழிபெயர்ப்புப்பணி உச்சநிலையை அடைந்தது. ஹனீப் பின் இஸ்ஹாக் இப்பணியில் டுபட்ட குறிப்பிடத்தக்க அறிஞராவார். இவர் "ஹிபோக்கிரடிசின் 6 முக்கிய மருத்துவ நுல்களையும் கெலனின் 39 கட்டுரைகளையும் போலின் 7 நுல்களையும் அரபியில் மொழிபெயர்த்தார். அத்துடன் சுயமாகவே பல மருத்துவ நுல்களையும் இவர் எழுதினார். ஹாபின் யஉறியா என்பாரும் கெலனின் 17 மருத்துவ நுல்களை மொழிபெயர்த்துள்ளனர். (இஸ்லாமியக் கலைகள் முஹம்மது சரீப் றம்ஸீன் பக்கம்.112)*

*ஈராக்கின் ஐயார்பிரதேசத்தில் வாழ்ந்த ஸாதிக் பின் குர்ஆக் என்பாரும் ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளராவார். இவர் மருத்துவம் சம்பந்தமான பல நுல்களை எழுதியுள்ளார். இந்நுல்களில் 31 பாகங்கள் எகிப்தில் அச்சிடப்பட்டுள்ளன. தலை மார்பு வயிறு முதலிய பகுதிகளைத் தாக்கும் நோய்கள் அவற்றுக்கான காரணங்கள் நோயின் அறிகுறிகள் சிகிச்சை முறைகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் இவரது நுல்களில் காணப்படுகின்றன. கிரேக்க மருத்துவ மேதை கெலனின் உடற்ற்று மருத்துவம் பற்றிய 7 பிரதான நுல்கள் காலத்தால் அழிந்துவிட்டன. அவற்றின் அரபு மொழிபெயர்ப்பு நுல்கள் மட்டுமே எங்கும் இன்றும் கிடைக்கின்றன. மஃமுனினால் நிறுவப்பட்ட பைதுல் ஹிக்மா மருத்துவத் துறையில் ஈடுபடுவோருக்கும் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் எப்போதும் ஊக்கமளித்து வந்தது. இதனால் இஸ்லாமிய உலகில் மருத்துவத்துறை அதிக செல்வாக்குடன் துரித வளர்ச்சிக் கண்டது. உமையா காலத்தில் அரபு தேசிய மொழியாக்கபட்டதால் அரபியரல்லாதோரும் அரபியில் தேர்ச்சி பெறும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இதனால் அரபியில் பெயர்க்கப்பட்ட*

*மருத்துவ நுல்களைப் பலரும் படிக்கவும் ஆராயவும் முற்பட்டனர். இது இஸ்லாமியர்களது மருத்துவ அறிவு விரிவுற பெரும் துண்டுதலாக அமைந்தது. எனவே இஸ்லாம் அறிஞர்கள் மருத்துவத்துறையில் அதிக கவனம் செலுத்தி மருத்துவ நுல்களை மொழி பெயர்த்ததுடன் புதிய பல மருந்துகளைக் கண்டுபிடிப்பதிலும் புதிய பல சிகிச்சைமுறைகளை அறிமுகப்படுத்துவதிலும் நவீன கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தினர்.*

**மருத்துப் பணிகளும் சேவைகளும்**

*மருத்துவக் கல்லுரிகள் ஆய்வுக்டங்கள் மருத்துவமனைகள் மருந்துக்கடைகள் போன்றவற்றை நிறுவி இத்துறையின் வளர்ச்சிக்கு உதவினர். இஸ்லாமியார்கள் மத்தியில் எண்ணற்ற அறிஞர்கள் இத்துறையில் ஈடுபட்டதனால் உலகெங்கும் போதிய மருத்துவர்கள் தோன்றினர். இத்தகைய மருத்துவர்கள் மருத்துவத் துறையில் மட்டுமின்றி வேறுபல துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான மருத்துவர்களின் எண்ணிக்கை அபரிமிதமாய் இருந்ததனால் அவர்களைக் கணக்கிட்டுக் கூறமுடியாது என வரலாற்றாசிரியர் ஜோர்ஜ் ஸைதான் குறிப்பிடுகின்றார். கி.பி 3 ஆம் நுற்றாண்டில் கலீபா முதவக்கலின் குடும்ப வைத்தியர்கள் இருந்ததாகவும் அறியப்படுகின்றது. இத்தகைய எண்ணற்ற மருத்துவர்களுள் மிகவும் முக்கியமானவர்களாக அர்ராஸி ஹீனைன் பின் இஸ்ஹாக் அலி இப்னு ஹீனா இப்னு மைமூன் போன்றோரைக் குறிப்பிடலாம்.*

**மருத்துவத்துறைக்குத் தகுதியானவர்களைச் பரீசோதித்தல்**

*வைத்தியர்களைப் பரீட்சித்து தகுதியுடையவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் பழக்கமும் காணப்பட்டது. இத்தகைய பரீட்சையை நடத்துபவர் பிரதம வைத்தியராக கருதப்பட்டார். அவர்களுள் முக்கியமானவர்களாக பக்தாத்தில் வாழ்ந்த ஸினான் பின் ஸாபித் எகிப்தில் வாழ்ந்த ஹஸ்புத்தீன் ஆகியோர்விளங்குகிறார்கள். மஃமூன் முஃதிம் காலங்களில் மருந்து கலப்பவர்களுக்கும் பரீட்சை நடத்தப்பட்டது. சில வைத்தியர்கள் இராணுவத்திற்கென்றும் வேறுசிலர் கலீபாக்கள் அமீர்களுக்கென்றும் நியமிக்கப்பட்டிருந்தனர். இத்தகையோருக்கு அரசு சம்பளம் வழங்கியது. இவர்களைத் தவிர பொதுவான வைத்தியர்கள் குடிகளுக்கு மருத்துவம் செய்து வந்தனர். அத்தகையவர்களில் சிலர் குறிப்பிட்ட நோய்களில் மாத்திரம் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தனர். குறிப்பாக கண் மருத்துவத் துறையில் தேர்ச்சிபெற்ற பலர் எகிப்தில் காணப்பட்டனர். பெண்கள் சம்பந்தப்பட்ட நோய்களில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களும் கணிசமாகக் காணப்பட்டனர். பெண்கள் குழுவொன்றும் மருத்துவத்துறையில் ஈடுபட்டிருந்தது. அவர்களுள் 'பெய்னைச் சேர்ந்த அல் அபித் என்பாரின் மகளும் சகோதரியும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் பெண்கள் தொடர்பான மருத்துவத்துறையில் தலை சிறந்து விளங்கியதுடன் குறிப்பாக ஸ்பெய்ன் கலீபா மன்ஸீரின் குடும்பப் பெண்களுக்கு மருத்துவம் செய்தனர்.*

**முடிவுரை**

*பன்னெடுங்காலமாக இஸ்லாமிய மருத்துவர்கள் எந்தவொன்றையும் ஆய்வுக்குட்படுத்தி அதில் ஆய்வு நுணுக்கங்களையும் பயன்படுத்தி நோய்களைக் கண்டறிவதிலும் அவற்றுக்கு சிகிச்சையளிப்பதிலும் தலைசிறந்து விளங்கினர். சிறுநீரின் தன்மை இதயத்துடிப்பு ஆகியவற்றை அவதானிப்பதன் மூலம் நோய்களைக் கண்டறியும் முறையை இஸ்லாமியர்களே முதலில் அறிமுகம் செய்தனர். காலப்போக்கில் நவீன மருந்து வகைகளையும் மருத்துவ உபகரணங்களையும் பயன்படுத்தி மருத்துவக்கலை மேம்பட காரணமாயிருந்தனர். தொழுநோய் போன்ற கொடிய*

*நோய்களுக்கு சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தி மருத்துவத்துறையை இன்னுமின்னும் புனிதமாக்கினார். நாட்டு வைத்திய முறைகளையும் நன்கறிந்திருந்தனர். மருத்துவக் குறிப்புகள் எக்காலத்தவருக்கும் பயன்பட வேண்டுமென்று பண்டைக்காலந்தொட்டு ஏடுகளில் எழுதிவைத்து உலகமொழிகளிலும் மொழிபெயர்த்து வழங்க முனைப்புடன் செயலாற்றியுள்ளனர். இஸ்லாம் உலகின் மிகப்பெரும் மருத்துவர்கள் பன்னெடுங்காலமாக மருத்துவக்கலையை சிறந்ததொரு சே வையாகக் கருதி சிறப்பாகச் செய்து வருகின்றனர். உடலின் அனைத்துப் பகுதிகளையும் பாதிக்கும் நோய்கள் பற்றி விரிவாக விளக்கும் நுல்களும் கலைக்களஞ்சியங்களும் இஸ்லாமியர்களால் இயற்றப்பட்டுள்ளன. 12 ஆம் நுற்றாண்டில் இப்னு ஸீனா என்பவரால் 5 பாகங்களாக எழுதப்பட்ட காணுன் பில் திப் மருத்துவத்துறையின் வேதநுல் என ஒஸ்வர் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். எனவே மருத்துவக்கலை வளர்ச்சிக்கு இஸ்லாமியர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதோடு மட்டுமல்லாது எண்ணி மெச்சத்தகுந்ததும் எனலாம்.*

**பார்வை நுல்கள்**


1. *இஸ்லாமியக் கலைகள் முஹம்மது சரீப் றம்ஸீன் ஜெய்னியா நிலையம் வவுனியா முதற்பதிப்பு, 1999.*
2. *ம.முகம்மது உவைஸ் பீ.மு.அஜ்மல்கான் (1986), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடு, மதுரை.*
3. *அப்துற், ரஹீம், ''இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்'' தொகுதி 123. யுனிவர்ல் பிரிண்டிங் ஹவுஸ், 11 சுல்தான் தெரு சென்னை, முதற்பதிப்பு, 1979.*
4. *அப்துல் ரகூப் பாகவி. ஆர் (மொழிபெயர்ப்பு ஆசிரியர்), ''அண்ணல் நபி' இஸ்லாமிய நிறுவனம் டிர்ட் 78 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை, 12 முதற்பதிப்பு, 1995.*


## References


1. Islamic Arts, Muhammad Sharif, Ramzeen, Jainiya Station, Vavuniya, First Edition, 1999.
2. M. Muhammad Uwais, B. M. Ajmal Khan, History of Islamic Tamil Literature, Madurai Kamarasar University Publication, Madurai, 1986.
3. Abdul - Rahim - 'Islamic Encyclopaedia' Volume 1,2,3. Universal Printing House, 11 Sultan Street, Chennai, First edition - 1979.
4. Abdul Ragoo Bhagvr (Translator) - 'Annal Nabi' Islamic Institute Trust, 78 Perambur Highway, Chennai, First Edition – 1995.